**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 91/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W. 1 |
| Name | : | லாரன்ஸ் |
| Father’s /Husband Name | : | பிச்சமுத்து |
| Village | : | மணவாளநல்லூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 68 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 15th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 16.12.2024 ம்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் வீட்டு வாசலின் எதிரே நின்று வேலை பார்த்து கொண்டிருந்த போது எனது மனைவி எனது வீட்டு முன்பு சாலையின் ஓரமாக துணி காய போட்டு கொண்டிருந்தார். அப்போது மெயின்ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த ஊதா நிறம் கொண்ட Scooty இருசக்கர வாகனம் ஒன்று ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து எனது மனைவி மீது விபத்து ஏற்படுத்தி அவருக்கு தலையில் இரத்த காயமும் தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எனது மனைவியை நானும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் மற்றும் ரீட்டா என்பவரும் தெருவை சேர்ந்தவர்களும் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திருவிழிமிழலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துசென்றோம். பின்னர் அங்கிருந்து தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்தவமனைக்கு அழைத்துசென்றோம். எனது மனைவி தஞ்சாவூரில் சுமார் 20 நாட்களாக சிகிச்சையில் வைத்திருந்தோம். என்னுடன் யாரும் இல்லாத காரணத்தினால் சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்த பிறகு ஜனவரி மாதம் போல் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் புகார்

கொடுத்ததாக நினைவுள்ளது. தேதி சரியாக நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தை நான் தான் கொடுத்தேன். அதிலுள்ள கையொப்பம் என்னடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிதான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி விபத்து ஏற்படுத்தினார். போலீசார் என்னைவிசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் எனது மகன் ரகு எழுதினார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று எனது மகன் வீட்டில் இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் ஜேம்ஸ், பிலிப்ஸ் ராஜ், சுரேஷ், அருள்ராஜ் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சாட்சிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் இரண்டு நபர்கள் இருந்தார்கள். எனது தெருவைச் சேர்ந்த ரீட்டா, சுமதி ஆகியோர்களுக்கும் சம்பவத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு அதிகமான போக்குவரத்து வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். எனது வீடு மெயின்ரோட்டை ஒட்டி தான் உள்ளது என்றால் சரிதான். மெயின்ரோட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு அடி இறங்கி இருக்கும் என்றால் அரை அடி இறங்கி இருக்கும். திருவீழிமிழலை சுகாதார நிலையத்திற்கு எரவாஞ்சேரி காவல்நிலையம் வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனது மனைவி சம்பவம் நடந்த நாள் அன்று துணி காய போட்டு கொண்டு வினோத் என்பவருடன் பேசிகொண்டிருந்தார். வினோத் என்பவர்க்கும் சம்பவத்தை பற்றி தெரியும். நான் சம்பவம் நடந்த 25 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த எத்தனை நாட்களில் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சுமார் 2 நாட்களில் வந்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது மனைவியை தான் விசாரித்தார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சாலை எதிர்புறம் வேலைபார்த்து கொண்டிருந்தேன் என்றாலும் சத்தம்கேட்டுதான் சம்வத்தை பார்த்தேன் என்றாலும் சரிதான். நான்சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது மனைவி தான் துணிகாய போடும் போது சாலையில் வாகனம்வருவதை பார்க்காமல் வாகனம் மோதிவிடுமோ என்ற அச்சத்தில் ரோட்டில் தடுமாறி விழுந்து விட்டார் என்றாலும்

சரியல்ல. நான் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது மனைவிக்கு சாதகமாக நஷ்ட ஈடு தொகை வழங்கப்பட்டு தீர்ப்பாகி உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினால் தான் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக ஆஜர் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும் ஆஜர் எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 11:35:40 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`